**வரையறுத்த இலங்கை திரிபோஷ கம்பனி - 2023**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

வரையறுத்த இலங்கை திரிபோஷ கம்பனியின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான இலாப நட்டக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள், பொழிப்பாக்கிய முக்கிமான கணக்கீட்டு கொள்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கவேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.
கம்பனியின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உண்மையாகவும் நியாயமாகவும் வெளிப்படுத்தும் வகையில் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்புபட்ட தரப்பினர்களின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.
நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது கம்பனியின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்நியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது அதிகார கம்பனியினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்நியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாகும்.
2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடன்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டு விடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு சபையின் உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை

- கணக்கீட்டு கொள்கையின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்

- சம்பவங்கள் அல்லது நிலைமையின் காரணமாக சபையின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவகத்திற்கு உள்ள ஆற்றல் தொர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்கு வருதல், பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்கு வந்தால் நிதிக்கூற்றுக்களில் அது சம்பந்தமான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்த வேண்டியதுடன் அந்த வெளிப்படுத்தல்கள் பேணியவையாக காணப்படாதிருந்ததால் எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைத்தல் வேண்டும். எவ்வாறாயினும் எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கும் போது கம்பனியின் பணிகளை தொடர்ச்சியாக மதிப்பாய்வு செய்வதற்கு இணங்கக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புததகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதா,

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது கம்பனியின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க சபை செயற்பட்டுள்ளதா,

- தனது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் செயற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா,

- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா,

**1.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முகாமைத்துவ தீர்மானங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மைகள்**

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனவிதிக் கோவையின் viii ஆம் அத்தியாயத்தின் 10.1 ஆம் பிரிவு மற்றும் xii ஆம் அத்தியாயத்தின் 7.2 மற்றும் 7.3 ஆம் பிரிவு | அவசரகால கடமைகள் குறித்து சனி, ஞாயிறு அல்லது பொது விடுமுறை நாட்களில் பணிக்கு நியமிக்கப்படும் ஒரு பதவிநிலை உத்தியோகத்தர் ஒருவர் அத்தகைய பணியின் ஒவ்வொரு நாளுக்கும் திரண்ட மாத சம்பளத்தில் 1/20 ஐப் பெற நாளைக்கு 08 மணிநேரத்திற்கு குறையாமல் பணிபுரிய வேண்டும் எனினும், இந்த கொடுப்பனவை பெற்ற கம்பனியின் அனைத்து உத்தியோகத்தர்களும் 08 மணித்தியால சேவைக் காலத்தினை சேவைக் காலத்தில் ஈடுபடாது ரூபா 1,615,088 விடுமுறைக் கொடுப்பனவை மீளாய்வாண்டினுள் பெற்றுக்கொண்டிருந்தனர் . கைவிரலடையாள இயந்திரத்திலிருந்து | இலங்கை திரிபோஷ கம்பனி கம்பனிகள் சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட கம்பனியொன்று மற்றும் பொது முயற்சிகள் திணைக்களத்தினால் மேற்பார்வை செய்யப்படும் பொது முயற்சியொன்று என்பதால் தாபனவிதிக் கோவையின் ஏற்பாடுகள் பொருத்தமற்றது என்பதுடன், 1954 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க கடைகள் மற்றும் அலுவலகப் பணியாளர்கள் சட்டம் மற்றும் அதன் அடிப்படையிலான தொழிலாளர் ஆணையரால் கையெழுத்திடப்பட்ட 131 ஆவது அதிகாரமான 1950 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க தொழில் பிணக்குகள் சட்டத்தின் 12(1) ஆம் பிரிவின் கீழ் பிணக்குகளை தீர்ப்பதற்கான நிபந்தனைப் பத்திரம் என்பது, அதன் பிரிவு 24 இன் | தாபனவிதிக் கோவையின் விதிமுறைகளின் படி செயல்பட வேண்டும் மற்றும் அதற்கு மாறாக செயற்பட சம்பந்தப்பட்ட நிறுவனங்களிடமிருந்து முறையான ஒப்புதல் பெறப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | பெறப்பட்ட தரவுகளின்படி, அந்தந்த விடுமுறை நாட்களில் சில உத்தியோகத்தர்கள் கடமைக்கு சமூகமளிக்கவில்லை, ஆனால் அந்த நாட்களிலும் இந்த கொடுப்பனவு பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. மேலும், ஒரு வேலைக்கு ஒரு கொடுப்பனவு / சலுகை மட்டுமே விண்ணப்பிக்க வேண்டும் என்றாலும், இந்த கொடுப்பனவுக்கு கூடுதலாக, நிறுவனம் ஒவ்வொரு வேலை விடுமுறைக்கும் ஒரு பதில் விடுமுறை அல்லது பதில் விடுமுறை தின கொடுப்பனவை வழங்கியிருந்ததுடன், அதற்காக ரூபா 477,019 செலுத்தப்பட்டிருந்தது. | அடிப்படையில் ‘‘நிறுவனத்தினுள் சேவையாற்றாத திகதிகளுக்கு இதுவரை பின்பற்றப்பட்ட நடைமுறையை பின்பற்றி செயற்படுவதற்கு புதிய கம்பனி இணங்கியது’’ என்று குறிப்பிடப்பட்டிருந்தது. அதற்கேற்ப, நிறுவனத்தில் வேலை செய்யாத நாட்கள் தொடர்பில் செயற்படுவதற்கு அதிகாரம் இதன்மூலம் வழங்கப்பட்டுள்ளது என்று கூறப்பட்டுள்ளது, அதன்படி, மேலே உள்ள பிணக்கு தீர்ப்பனவு நிபந்தனைகள் பத்திரத்தில் இணக்கப்பாடுகளுக்கு இணங்கா சீ.ரீ.சீ. சேர்விசஸ் கம்பனி மற்றும் பின்னர் இலங்கை திரிபோஷ கம்பனியின் முகாமைத்துவத்தினால் நிறுவனத்தில் வேலை செய்யாத நாட்களில் மேலதிக நேரம் மற்றும் விடுமுறை கொடுப்பனவுகளுக்கு பழைய முறையின்படி செயற்படுவதற்க இணக்கப்பாடு தெரிவிக்கப்பட்டுள்ளது என்பது. | |
| (ஆ) | 2021 நவம்பர் 16 ஆந் திகதி அரசாங்க பொது முயற்சிகள் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட பொது முயற்சிகளுக்கான நிர்வாக வழிகாட்டிக் கோவை மற்றும் செயல்வழிக் கையேடு | | | |
| | (i) செயற்பாட்டுக் கையேட்டின் 3.2 (v) ஆம் பந்தி | ஊக்குவிப்பு படிகளைச் செலுத்தும் போது பொது முயற்சிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும் அவ்வாறான | இலங்கை திரிபோஷ கம்பனியால் தயாரிக்கப்பட்ட நிர்வாக விதிக் கோவை, பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் இதற்கு முன்னர் பொது முயற்சிகள் திணைக்களத்திற்கு | நிர்வாக விதிக் கோவை மற்றும் செயற்பாட்டுக் கையேட்டுக்காக இதுவரை அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப் படாமையால் வழிகாட்டிக் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | அங்கீகாரமின்றி சுபோச விற்பனையிலிருந்து இலக்கிடப்பட்ட படியாக கம்பனியின் அனைத்து ஊழியர்களுக்குமாக மீளாய்வாண்டின் போது ரூபா 12,687,147 ஊக்குவிப்பு படிப்பணம் செலுத்தப்பட்டது. | அனுப்பப்பட்டுள்ளது என்பதுடன், 2023 ஆம் ஆண்டின் போது கம்பனியின் அனைத்து பிரிவுகளையும் உள்ளடக்கும் வகையில் தயாரிக்கப்பட்ட செயற்பாட்டுக் கையேடும் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் பொது முயற்சிகள் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டது என்பது. | கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ii) | செயற்பாட்டுக் கையேட்டின் ஆம் பந்தி | 3.3 | ஒவ்வொரு பிரிவினதும் சேவைத் தேவைப்பாடுகள் மற்றும் நிறுவனக் கட்டமைப்பு உள்ளடக்கப்பட்ட மூலோபாய மனிதவளத் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டிய போதிலும், கம்பனி அதற்கமைய செயற்பட்டிருக்கவில்லை. | ஒவ்வொரு பிரிவினதும் சேவைத் தேவைப்பாடுகள் மற்றும் நிறுவனக் கட்டமைப்பு உள்ளடக்கப்பட்ட மூலோபாய மனிதவளத் திட்டமொன்றை தயாரிக்கும் பணி தற்போது இடம்பெறுகின்றது என்பது. | வழிகாட்டிக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (iii) | செயற்பாட்டுக் கையேட்டின் ஆம் பந்தி | 3.6 | கம்பனியால் மூலோபாயத் திட்டம், செயல்நடவடிக்கைத் திட்டத்தின் அடிப்படையில் ஆக்கபூர்வமான செயலாற்றல் மதிப்பாய்வுக் கட்டமைப்பொன்று அறிமுகப்படுத்தப்பட வேண்டியதுடன், ஒவ்வொரு ஊழியர்களினதும் செயலாற்றல் அண்மைய உத்தியோகத்தரால் மதிப்பீட்டுக்கு உட்படுத்தப்பட வேண்டிய போதிலும், மூன்றாம் நிலை மற்றும் சிரேஷ்ட மட்டத்திலான உத்தியோகத்தர்களுக்கு ஆக்கபூர்வமான செயலாற்றல் மதிப்பீடொன்று மேற்கொள்ளப்படவில்லை என்பது வெளிப்படுத்தப்பட்டது. | கம்பனியின் ஒவ்வொரு பணியாளரின் உற்பத்தித்திறனும் அருகிலுள்ள உத்தியோகத்தரால் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. | வழிகாட்டிக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | 2008 திசெம்பர் 31 ஆந் திகதிய 30/2008 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை | நிறுவனத்தின் ஊழியர்களுக்கு இந்த சுற்றறிக்கையைப் பயன்படுத்த முடியாது என்றாலும், மதிப்பாய்வாண்டில் இந்த சுற்றறிக்கையின்படி நிறுவன ஊழியர்களுக்கு இடர் கடனாக ரூபா 5,339,402 செலுத்தப்பட்டது. | 2023.06.21 ஆந் திகதி பொது முயற்சிகள் திணைக்களத்தின் உத்தியோகத்தர் குழுவிற்கும் இலங்கை திரிபோஷ நிறுவனத்தின் தலைவர் மற்றும் உத்தியோகத்தர்களுக்கும் இடையில் சந்திப்பொன்று இடம்பெற்றதுடன், அங்கு மேற்கொள்ளப்பட்ட இணக்கப்பாடுகளின் அடிப்படையில் நிறுவனத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்ட கடன் திட்டங்கள் மற்றும் ஏனைய படிகள் தொடர்பில் கம்பனியின் செயற்பாட்டுக் கையேட்டில் உள்ளடக்கி அதற்கு பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தினை பெற்று பொது முயற்சிகள் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது என்பது. | முறையான கடன் திட்டம் தயாரிக்கப்பட்டு, அதற்கான முறையான அங்கீகாரம் பெறப்பட வேண்டும். |
| (ஈ) | 2018 யூலை 18 ஆந் திகதிய 03/2018 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் ii ஆம் பந்தி | சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளை தீர்மானிக்கும் அதிகாரம் பணிப்பாளர் சபைக்கு வழங்கப்படவில்லை மற்றும் மேலதிக கொடுப்பனவுகளாக வழங்கப்படும் அனைத்து கொடுப்பனவுகளும் திறைசேரி செயற்பாட்டு திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட வேண்டும், 2017 இல் கம்பனி அறிமுகப்படுத்திய சுபோஷ தயாரிப்புக்காக பணியமர்த்தப்பட்ட சந்தைப்படுத்தல் முகாமையாளருக்கு பணிப்பாளர் சபையின் அற்கீகாரத்தின் அடிப்படையில் சுபோஷா கணக்கிலிருந்து ரூபா 10,000 தொகையான மேலதிக கொடுப்பனவு செலுத்தப்பட்டிருந்ததுடன் , அதற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 120,000 | -மேற்படி- | இதற்குத் தேவையான முறையான அனுமதிகள் பெறப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | திறைசேரியின் செயற்பாட்டு திணைக்களத்தின் அனுமதியின்றி செலுத்தப்பட்டிருந்தது. | | |
| (உ) | DMS/E4/13/08/413/1 ஆம் இலக்க மற்றும் 2013 மார்ச் 28 ஆந் திகதிய முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் இலக்கம் 30 | கம்பனிக்கு அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறைகளின்படி, அனைத்து சேவைப் பிரிவுகளுக்கும் பதவியை நிரந்தரமாக்கல், தரங்களுக்கு இடையேயான பதவி உயர்வுக்கான வினைத்திறன் தடைகாண் பரீட்சைகள் மற்றும் உரிய சந்தர்ப்பத்தில் தொடர்புடைய மட்டத்தின் இரண்டாவது அரச கருக மொழித் தேர்ச்சியை பெறுதல் ஆகியவை தொடர்பில் கம்பனி நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. மேற்கூறிய முன்நிபந்தனைகளை பூர்த்தி செய்யாமல் உரிய நியமனங்கள் மற்றும் பதவி உயர்வுகள் இடம்பெற்றிருந்தன. | இலங்கை திரிபோஷ கம்பனியை அரசாங்கத்திற்குக் கையகப்படுத்தும் போது தொழில் ஆணையாளருடன் முத்தரப்பு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டதையும், அந்த ஒப்பந்தம் தொடர்பில் பணியாளர்களை ஆட்சேர்க்கும் முறைமை காணப்படவில்லை என்பதையும், இந்த நிறுவனத்தில் பரீட்சை பரிவொன்று இல்லை என்பதையும், பதவி உயர்வு மற்றும் வினைத்திறன் தடைகாண் பரீட்சைகள் மற்றும் இரண்டாவது இரண்டாவது அரச கருக மொழித் தேர்ச்சி ஆகியவை குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், அது தொடர்பான எந்த நடைமுறையும் காணப்படாமையால் தற்போது அது தொடர்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கமைய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஊ) | 2022 சனவரி 18 ஆந் திகதிய 02/2022 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | 2019 மார்ச் 14 ஆந் திகதி முதல் தொலைபேசி கொடுப்பனவுகளுக்கு தகுதியற்ற கம்பனியின் (JM 1-1) மூன்றாம் நிலை உத்தியோகத்தர்களுக்கு ரூபா 1,000 தொகையான தொலைபேசி படியும், MA 1-1 மற்றும் MA 2-1 பதவிகளில் பணிபுரியும் 07 உத்தியோகத்தர்களுக்கு 2019 யூலை 15 ஆந் திகதி முதல் மீளளிப்பு அடிப்படையில் ரூபா | 2023.06.21 ஆந் திகதி பொது முயற்சிகள் திணைக்களத்தின் உத்தியோகத்தர் குழுவிற்கும் இலங்கை திரிபோஷ கம்பனியின் தலைவர் மற்றும் உத்தியோகத்தர்களுக்கும் இடையில் இடம்பெற்ற சந்திப்பில் எட்டப்பட்ட இணக்கப்பாட்டின் அடிப்படையில், பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் கம்பனியால் நடைமுறைப்படுத்தப்படும் கடன் திட்டங்கள் மற்றும் ஏனைய சலுகைகள் ஆகியவற்றை கம்பனியின் | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கமைய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | 1,000 தொலைபேசி கொடுப்பனவு பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் செலுத்தப்பட்டிருந்தது. | செயல்பாட்டுக் கையேட்டில் உள்ளடக்கி அதற்காக பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தினை பெற்று பொது முயற்சிகள் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டது என்பது. | |
| (எ) | 2022 சனவரி 14 ஆந் திகதிய 01/2015 (ii) ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | மீளாய்வாண்டில், எரிபொருள் கொடுப்பனவு வழங்க முடியாத MM சம்பள மட்டத்திலான் 05 உத்தியோகத்தர்களுக்கு ரூபா 1,200,000 வழங்கப்பட்டிருந்தது. | -மேற்படி- | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கமைய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஏ) | 2016 ஒக்தோபர் 21 ஆந் திகதிய 2016/02(I) ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கை | கம்பனியின் HM1-1 சேவைப் பிரிவைக் கொண்ட இரண்டு சிரேஷ்ட உத்தியோகத்தர்களுக்கு 2020 ஆம் ஆண்டு முதல் அனுமதியின்றி HM1-2 சேவைப் பிரிவின் கீழ் ஊதிய உயர்வு வழங்கப்பட்டுள்ளது. | முகாமைத்துவ சேவை சுற்றறிக்கை இலக்கம் 02/2016 இன் படி, HM 1-1 சேவைப் பிரிவினருக்கு சம்பள உயர்வு வழங்கப்பட்டுள்ளதுடன், கணக்காய்வுப் பரிந்துரையின்படி, நிர்வாக சேவை சுற்றறிக்கை இலக்கம் 02/2016(I) இன் படி எதிர்காலத்தில் HM பிரிவில் சம்பள உயர்வு வழங்கப்படும் என்பது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கமைய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1. நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 555,406,517 ஆன இலாபமாகஇருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டிற்கான நட்டம் ரூபா 48,310,073 ஆகும். அதற்கிணங்க நிதி விளைவுகளில் ரூபா 603,716,590 அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. இந்த அதிகரிப்பிற்கு வருமானம் அதிகரித்தமை பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | 2022 ஆம் ஆண்டுக்குரிய திரிபோஷா மீள் அனுப்பல்களுக்கு ரூபா 11,701,601 சுகாதார அமைச்சுக்கு செலுத்தப்பட வேண்டியதாக அடையாளம் காணப்பட்ட போதிலும், மீளாய்வாண்டில் உரிய தொகை செலுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2023/12/31 ஆந் திகதியில் உள்ளபடியாக சுகாதார அமைச்சிலிருந்து பெற வேண்டிய ரூபா 204,065,974 பெறுமதியான பட்டியல்கள் இருந்ததாகவும், நிலுவைத் தொகையான ரூபா 11,701,601 இந்த வருடத்தில் தீர்ப்பனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | இந்த தொகையை துரிதமாக தீர்ப்பனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | கம்பனியின் அமைப்பு அகவிதியில் படி, இலங்கையில் தாய் மற்றும் சேய் ஊட்டச்சத்தின்மையைக் குறைப்பதற்காக, இலங்கையினால் வலுவூட்டப்படும் மேலதிக உணவுப் பொருள் உற்பத்திக்காக வசதிகளை வழங்க வேண்டும் மற்றும் வருடாந்த திரிபோஷா தேவையை மதிப்பீடு செய்து அவற்றை வழங்க தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். இந்தத் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக, குடும்ப சுகாதாரப் பணியகம் வழங்கிய தரவுகளின் அடிப்படையில், ஆண்டுதோறும் திரிபோஷா உற்பத்திக்கான வருடாந்திர உற்பத்தித் திட்டம் தயாரிக்கப்பட்ட போதிலும், அது பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டு அனுமதி பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும், தயாரிக்கப்பட்ட உற்பத்தித் திட்டத்தின்படி, 795,036 வருடாந்த பயனாளிகளுக்கு திரிபோஷ வழங்குவதற்காக, பராமரிப்பு மற்றும் விடுமுறை நாட்களைத் தவிர்த்து 282 நாட்களில் உற்பத்திப் பணிகளை மேற்கொள்ள திட்டமிடப்பட்ட போதிலும் ஆண்டின் உண்மையான உற்பத்தி நாட்களின் எண்ணிக்கை 211 ஆகும். இதன்படி, மாதாந்த திரிபோஷ தேவை தொடர்பில் உற்பத்தி நடவடிக்கைகள் நிறைவடைந்த மாதங்களின் எண்ணிக்கை 03 மாத்திரம் ஆகும். மேலும், கம்பனி தயாரித்துள்ள உற்பத்தித் திட்டத்தின்படி, சுபோஷா மற்றும் கலோரி பிஸ்கட் உற்பத்திக்குத் தேவையான மூலப்பொருட்களின் அளவு குறிப்பிடப்படாததால், அந்த உற்பத்திக்கு தேவையான அளவு மூலப்பொருட்களை இனங்காண முடியவில்லை. அதன்படி, சுபோஷா மற்றும் கலோரி பிஸ்கட்டுகளுக்கு திரிபோஷாவின் தேவைக்காக மதிப்பிடப்பட்ட பொருட்களைப் பயன்படுத்துவதன் மூலம் கம்பனியின் உத்தேச நோக்கம் அடையப்படவில்லை. | வருடாந்த உற்பத்தித் திட்டம் திரிபோஷா பயனாளிகளின் தரவுகளின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டது, உற்பத்தித் திட்டத்தின்படி தயாரிக்கப்பட்ட வருடாந்த வரவு செலவுத் திட்டம் பணிப்பாளர சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் சுகாதார அமைச்சு / வரிசை அமைச்சகத்திற்கு அனுப்பப்படுகின்றமையால் உற்பத்தி திட்டத்திற்காக தனியானதொரு பணிப்பாளர் சபை அங்கீகாரம் பெறப்படவில்லை என்பது, உற்பத்தி பிரிவால் தயாரிக்கப்பட்ட வருடாந்த உற்பத்தித் திட்டம் கருத்திற்கொள்ளப்படும் மாதத்தின் மூலப்பொருள் எதிர்வுகூறலின் அடிப்படையில் மாதந்தோறும் திருத்தப்படும். 2023 ஆம் ஆண்டு பெப்ரவரி கடைசி வாரத்தில் உலக உணவு அமைப்பிலிருந்து மூலப்பொருட்களின் கொள்வனவின் போது மற்றும் இருப்பு முடிவடைதலும் மற்றும் தொடர்புடைய விவரக்குறிப்புகளின்படி மூலப்பொருட்கள் கிடைக்காதது மற்றும் வருடாந்த உற்பத்தித் திட்டத்தின்படி தயாரிக்கப்படும் திரிபோஷா மாஸ்டர் பைகளின் அளவு ஆகியவை போசணைப் பிரிவு மற்றும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அலுவலகங்கள் வழங்கும் தரவுகளின் அடிப்படையில் மாதந்தோறும் திருத்தப்படும். கம்பனியால் தயாரிக்கப்படும உற்பத்தித் திட்டத்தில், திரிபோஷ மற்றும் சுபோஷ தயாரிப்புகளுக்குத் தேவையான பொருட்களின் அளவு குறிப்பிடப்பட்டுள்ளது, மேலும் 2024 ஆம் ஆண்டு முதல் சுபோஷ கலோரி பார்களுக்கான உற்பத்தித் திட்டம் தொடர்புடைய விற்பனைத் பிரிவுகளின் எதிர்வுகூறலின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டது என்பது. | திரிபோஷா உற்பத்தி இலக்குகளை அடைவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் மற்றும் விவசாய அமைச்சும் சுகாதார அமைச்சும் இணைந்து தரமான சோள இருப்புகளைப் பெறுவதற்கும் வேலைத்திட்டமொன்று உருவாக்கப்பட்டு உற்பத்தியை அதிகரிப்பதற்கான மூலம் இயந்திரங்கள் குறைவாகப் பயன்படுத்தப்படுவதைத் தடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 2023 ஆம் ஆண்டில், கம்பனியால் தயாரிக்கப்பட்ட முடிவுப் பொருட்களின் அளவு 9,163,067 கிலோ என்பதுடன், இதில் 80 சதவீதம் அல்லது 7,341,728 கிலோ மட்டுமே திரிபோஷா உற்பத்தி செய்யப்பட்டிருந்ததுடன், மீதமுள்ள 20 சதவீதம் அல்லது 1,821,339 கிலோ சுபோஷ உற்பத்தி செய்யப்பட்டது. சுகாதார அமைச்சினால் நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட முன்னுரிமைப் பணியான திரிபோஷா உற்பத்தி இலக்கானது 62 வீதமாக எட்டப்பட்டபோது, மொத்த உற்பத்தியில் 20 வீதமான சுபோஷாவை உற்பத்தி செய்வது, நிறுவனத்தை நிறுவியதன் அடிப்படை நோக்கத்திற்கு இணங்கவில்லை என்பது வெளிப்படுத்தப்பட்டது. | வருடாந்த மூலப்பொருள் பெறுவனவின் அடிப்படையில் வருடாந்திர திரிபோஷா தேவையை பூர்த்தி செய்ய போதுமான அளவு மூலப்பொருட்களை பூர்த்தி செய்ய முடியும் என்றாலும், இந்த பெறுவனவுகள் மாதந்தோறும் முறையாக செய்யப்படாமல் இருப்பதால், திட்டமிட்ட இலக்குகளை அடைவது கடினமாக உள்ளமை, 2023 ஆம் ஆண்டின் மார்ச் மாதம் உலக உயவு அமைப்பிலிருந்து கிடைத்த நிதி நிறைவடைந்தவுடன் கிடைத்த மூலப்பொருட்களின் விவரக் குறிப்புகளுக்கு இணங்க மற்றும் கம்டபனியின் செயற்பாட்டு மூலதனத் தேவையை பூர்த்தி செய்வதற்காக மற்றும் விற்பனை முகவர்களின் வலையமைப்பின் ஊடாக சந்தைக்கு சுபோசாவை வழங்க வேண்டும் என்பதால் திரிபோசா உற்பத்திக்கு மேலதிகமாக சுபோசா உற்பத்தியும் குறைந்த மட்டத்தில் மேற்கொள்ள நேர்ந்துள்ளமை. | வருடாந்த திரிபோஷ் தேவையை நிறைவு செய்வதற்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும். |
| (ஈ) | கம்பனியை நிறுவியதன் முக்கிய நோக்கமான திரிபோஷ உற்பத்தியை விட, சுபோஷ உற்பத்தியில் நிறுவனம் அதிக ஆர்வத்துடன் இருந்ததாகவும், இந்த நிலைமைக்கு பிரதான காரணமாக சுபோஷ உற்பத்தி சந்தைப்படுத்தல் வருமானத்தின் அடிப்படையில் இலாபத்தில் 5 சதவீதம் முதல் 10 சதவீதம் வரை இலக்கு கொடுப்பனவை செலுத்தி கம்பனி நடவடிக்கை எடுத்தமை வெளிப்படுத்தப்பட்டது. மேலும், இலக்கு கொடுபபனவுகளுக்கு முறையான அங்கீகாரம் மற்றும் நடைமுறையொன்று காணப்படவில்லை. | ஒட்டுமொத்த உற்பத்தி இலக்குகளை அடிப்படையாகக் கொண்ட ஒரு இலக்கு கொடுப்பனவு முறையானது, பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்திற்கு அனுப்பப்பட்டு, அதன் படி கம்பனியின் செயல்பாட்டுக் கையேட்டில் உள்ளடக்கப்பட்டு பொது முயற்சிகள் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது என்பது. | வருடாந்த திரிபோஷா தேவையை பூர்த்தி செய்வதற்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும் மற்றும் உற்பத்தி இலக்கு கொடுப்பனவு முறைப்படுத்தப்பட வேண்டும். |
| (உ) | வருடாந்த திரிபோஷ தேவையை பூர்த்தி செய்வதற்காக, உற்பத்திக்கு பயன்படுத்தக்கூடிய திட்டமிடப்பட்ட மூலப்பொருட்களான சோளம், சோயா, பால் பவுடர், வைட்டமின்கள் மற்றும் தாதுக்கள் போன்றன முறையே 8927, 3862, 304, 09 மற்றும் 90 மெ.தொன்களாக காணப்பட்டதுடன், ஆண்டினுள் உள்ளபடியாக | 2023 ஆம் ஆண்டு பிப்ரவரி கடைசி வாரத்தில், உலக உணவு அமைப்பிலிருந்து பெறப்பட்ட மூலப்பொருட்கள் மற்றும் உள்நாட்டு மூலப்பொருட்கள் வாங்கப்பட்டதால், இருப்பு முடிவடைந்தமையும் தொடர்புடைய | வருடாந்த திரிபோஷ் தேவையை நிறைவு செய்வதற்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | உற்பத்திக்காக வெளியிடப்பட்ட பொருட்கள் முறையே 7,179, 2,432, 284, 08 மற்றும் 84 மெற்றிக் தொன்கள் ஆகும். அதன்படி, வருடாந்த திரிபோஷ தேவையை பூர்த்தி செய்ய நன்கொடைகள் மற்றும் கொள்முதல் மூலம் போதுமான மூலப்பொருட்கள் பெறப்பட்டாலும், தேவை பூர்த்தி செய்யப்படவில்லை என்பதுடன், 1,822 மெட்ரிக் தொன் சுபோஷா உற்பத்திக்கு இந்த மூலப்பொருள் பயன்படுத்தப்பட்டமை இதற்கு காரணமாக அமைந்திருந்தமை வெளிப்படுத்தப்பட்டது. | விவரக்குறிப்புகளுக்கு இணங்க பொருட்கள் பெறப்படாமை ஆகியன உற்பத்தி நடவடிக்கைகளுக்கு மூலப்பொருட்களை பயன்படுத்த முடியாதிருந்தமை, மூலப்பொருள் கிடைப்பனவு கிரமமாக்கப்பட்டமையின் அடிப்படையில் யூன் மாதம் முதல் உற்பத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ள இயலும் என்பது, வருடாந்த திரிபோஷா தேவைப்பாட்டினை பூர்த்தி செய்வதற்கு தேவையான மூலப்பொருட்கள் மாத்திரம் வருடாந்த மூலப்பொருள பெறுவனவுகளின் அடிப்படையில் பூர்த்தி செய்ய முடியும் என்றாலும், அந்த பெறுவனவுக் மாதாந்தம் உரிய முறையில் இடம்பெறாமையால் திட்டமிடப்பட்ட இலக்குகளை அடைவது கடினமாக இருந்ததுடன், 2023 ஆம் ஆண்டின் மார்ச் மாதத்தில் உலக உணவு அமைப்பிலிருந்து கிடைத்த மானயிங்கள் நிறைவடைந்ததுடன், கிடைத்த மூலப்பொருட்களின் விவரக்குறிப்புகளைப் பூர்த்தி செய்வதற்கும், நிறுவனத்தின் செயல்பாட்டு மூலதனத் தேவையைப் பூர்த்தி செய்வதற்கும் மார்ச் மாதத்தில் சுபோஷ உற்பத்தியை ஒப்பீட்டளவில் அதிகரிக்க வேண்டியிருந்தது. | |
| (ஊ) | முன்மொழியப்பட்ட சைலோ கட்டமைப்பின் நிர்மாணத்திற்காக, 2021 ஆம் ஆண்டில் உலக உணவுத் திட்டத்தால் (WFP) ரூபா 192,091,525 வழங்கப்பட்டிருந்ததுடன், அந்தப் பணம் நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டது. 2023 ஜனவரி 02 இல் உள்ளபடியாக அதன் முதிர்வு பெறுமதி ரூபா 207,815,400 ஜனவரி 20 அன்று பணமாக்கப்பட்டதுடன் 2023 ஜனவரி 27 ஆந் திகதி ரூபா 125,000,000 மீண்டும் முதலீடு செய்யப்பட்டது. எவ்வாறாயினும், இந்த நிதியை வழங்குவதன் நோக்கத்தை நிறைவேற்றாமல் வேறு நோக்கங்களுக்காக இந்த நிதி செலவிடப்பட்டதை அவதானிக்க | நிலையான வைப்புத்தொகையை பணமாக்க 08/2022 ஆந் திகதிய பணிப்பாளர் சபை பத்திரத்தின் மூலம் அங்கீகாரம் கிடைத்திருந்தது எனவும், அத்தியாவசியமான மூலதனச் செலவுகள் மற்றும் திரிபோஷா தயாரிப்பிற்கான பெற வேண்டிய பட்டியல்கள் இருப்பதால், நிலையான வைப்பின் முதிர்வுக்கு முன்பே பணமாக்க பரிந்துரை வழங்கப்பட்டாலும், 2023/01/02 ஆந் திகதி வரையிலும் (முதிர்வு திகதி) கம்பனி அதனை முகாமை செய்ததாகவும், 2022/10/20 ஆந் திகதி அங்கீகரிக்கப்பட்ட 08/2022 | இந்த பணத்தை உத்தேசட நோக்கத்திற்காக செலவிடப்பட வேண்டும் மற்றும் முதலீட்டு தீர்மானங்கள் எடுக்கப்படும் போது நிறுவனத்திற்கு அதிகபட்ச நன்மைகள் கிடைக்கும் வகையில் தீர்மானம் எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| முடிந்தது. மேலும், 18 நாட்களுக்கு இந்தத் தொகைக்கு வட்டி எதுவும் பெறப்படவில்லை, மேலும் 07 நாட்கள் மீள் முதலீட்டிற்காக செலவிடப்பட்டது. | ஆம் இலக்க பணிப்பாளர் சபை பத்திரத்தின் பிரகாரம் 2023/01/20 ஆந் திகதி நிலையான வைப்பு காசாக்கப்பட்டு மூலதன் நிதியேற்பாட்டுக்கு தேவையான நிறுத்தி வைத்தல்கள் நடைமுறைக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டு 2023/01/26 ஆந் திகதி இடம்பெற்ற பணிப்பாளர் சபை கூட்டத்திற்கு 02/2023 ஆந் திகதிய பணிப்பாளர் சபை பத்திரத்தின் ஊடாக ரூபா 125 மில்லியன் மீண்டும் நிலையான வைப்புகளில் முதலீடு செய்வதற்காக பணிப்பாளர் சபை பத்திரமொன்று அனுப்பப்பட்டது என்பது, அதன் பின்னர் 2023/01/27 ஆந் திகதி நிலையான வைப்புக்கள் திறக்கப்பட்டது என்பது, 2024 ஆம் ஆண்டு சயிலோ செயற்திட்டம் உள்ளடங்களாக எஞ்சிய மூலதன தேவைப்பாடுகளுக்காக பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் ரூபா 100 மில்லியன் முதலீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | |

### 3.2 தொழிற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| திரிபோஷ கம்பனியின் அமைப்பு அகவிதியின் படி, பணிப்பாளர் சபையின் கட்டமைப்பு 07 உறுப்பினர்களைக் கொண்டதுடன், அது சம்பந்தப்பட்ட துறைகளை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் நியமிக்கப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது. எவ்வாறாயினும், சுகாதார அமைச்சின் பிரதிநிதியாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் நியமிக்கப்பட்ட போதிலும், அவர் 2022 இல் நடைபெற்ற 12 நிர்வாக சபை கூட்டங்களில் 8 இல் கலந்து கொள்ளவில்லை என்பதும், 2023 இல் நடைபெற்ற 10 நிர்வாக சபை கூட்டங்களில் எதிலும் அவர் கலந்து கொள்ளவில்லை என்பதும் அவதானிக்கப்பட்டது. | பணிப்பாளர் சபைக் கூட்டங்களில் பங்குபற்றுவதற்கு சுகாதார அமைச்சின் பிரதிநிதியாக நியமிக்கப்பட்டுள்ள சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்திற்கு இலங்கை திரிபோஷ கம்பனி அழைப்புக் கடிதங்களை சமர்ப்பித்துள்ளது. அவர் பங்கேற்காத போது பணிப்பாளர் சபையால் 2023.10.02 அன்று எடுக்கப்பட்ட தீர்மானங்களை நடைமுறைப்படுத்தல் எனும் தலைப்பில் சுகாதார சேவைகள் பணிப்பாளருக்கு கடிதமொன்று பணிப்பாளர் நாயகத்திற்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது என்பது. | பணிப்பாளர் சபை கூட்டங்களில் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் பங்கேற்பை அதிகரிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

### 3.3 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | கம்பனியால் ரூபா 3,555.6 மில்லியனான மூலப்பொருள் கிரயம், நேரடி செலவு ரூபா 602.3 மில்லியன் மற்றும் ரூபா 50.7 மில்லியனான சம்பளம் உள்ளடங்களான நிர்வாக செலவினம் திரிபோசா மற்றும் சுபோஷா தயாரிப்புகளின் விகிதாசாரத்தின் அடிப்படையில் (80 சதவீதம் மற்றும் 20 சதவீதம்) பகிர்ந்தளிக்கப்பட்டிருந்ததுடன், விற்பனை மற்றும் விநியோக செலவுகள் திரிபோஷா மற்றும் சுபோஷ தயாரிப்புகளுக்கு இடையே 49 மற்றும் 51 சதவீதம் என்ற விகிதத்தில் விநியோகம் செய்யப்படுவதால், நிர்வாக செலவுகள் 92 மற்றும் 8 சதவீதம், விகிதத்தில் மற்றும் நிதி செலவுகள் 65 மற்றும் 35 சதவீதம் எனும் ஏற்றுக்கொள்ளக்கூடிய முறையின்றி, பகிர்ந்தளிக்கப்பட்ட காரணத்தால் திரிபோஷாவின் உற்பத்திக் கிரயத்தின் சரியான தன்மை உறுதிப்படுத்தப்படவில்லை. | திரிபோசா மற்றும் சுபோஷா உற்பத்தியில் குறிப்பாக அடையாளம் காணக்கூடிய செலவுகள் தனித்தனியாக அடையாளம் காணப்பட்டு மற்ற அனைத்து செலவுகளும் திரிபோஷா மற்றும் சுபோஷா உற்பத்தியின் விகிதாசாரத்தின் அடிப்படையில் பிரிக்கப்படுகின்றன. | திரிபோஷ மற்றும் சுபோஷ உற்பத்தியில் அடையாளம் காணக்கூடிய செலவுகள் மற்றும் வருமானங்கள் திரிபோஷ மற்றும் சுபோஷ உற்பத்தி தொடர்பாக தனித்தனியாக அடையாளம் காணப்பட வேண்டும் என்பதுடன், அவ்வாறு குறிப்பாக அடையாளம் காண முடியாத அனைத்து செலவுகள் மற்றும் வருமானங்கள் திரிபோஷ மற்றும் சுபோஷ உற்பத்தி விகிதாசாரத்திலும் பகிர்ந்தளிக்கப்பட்டு திரிபோஷ மற்றும் சுபோஷ உற்பத்தி தொடர்பான இலாப நட்டம் தீர்மானிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | பணிப்பாளர் சபையின் ஒப்புதலின் அடிப்படையில், வைப்பு வட்டி வருமானம் மற்றும் கழிவு விற்பனை மூலம் கிடைக்கும் வருமானம் ஆகியவற்றின் அடிப்படையில், மீளாய்வாண்டில் நிறுவனத்தின் ஊழியர்களுக்கு ரூபா 15,390,730 ஊக்கத்தொகை செலுத்தப்பட்டதுடன், திரிபோஷா உற்பத்தி செயல்பாட்டின் போது ஏற்படும் விலகல்கள் கழிவுகளாக விற்கப்படுகின்றன, மேலும் பெறப்பட்ட பணம் சுகாதார அமைச்சிற்கு செலவு வைக்கப்பட வேண்டும் என்றாலும், இந்த ஊக்குவிப்பு படி செலுத்த பயன்படுத்தப்பட்டது. மேலும், ஊக்குவிப்பு படி செலுத்துவதற்கான முறையான நடைமுறை தயாரிக்கப்பட்டு அங்கீகரிக்கப்படவில்லை. வருகை மற்றும் செயல்திறன் அடிப்படையில் இந்த ஊக்குவிப்பு படி ஒரு கொடுப்பனவாக பெயரிடப்பட்டாலும், இது வருகையைப் பற்றி மட்டுமே | இலங்கை திரிபோஷ கம்பனியால் தயாரிக்கப்பட்ட நிர்வாக விதிகளின் கோவை பணிப்பாளர் சபையின் அனுமதியின் பேரில் பொது முயற்சிகள் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன், 2023 ஆம் ஆண்டில் கம்பனியின் அனைத்து அம்சங்களையும் உள்ளடக்கும் வகையில் தயாரிக்கப்பட்ட செயற்பாட்டு கையேடும் பணிப்பாளர் சபையின் அனுமதியின் பேரில் பொது முயற்சிகள் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்பது. இது பணிப்பாளர் சபையின் அனுமதியின் பேரில் ஆண்டுதோறும் வழங்கப்படும் கொடுப்பனவு என்பதுடன், அதனை வழங்குவதற்கான பொது முயற்சிகள் திணைக்களத்தின் இணக்கப்பாடு PE/COM/SLTL/EST ஆம் இலக்க மற்றும் 28/11/2012 திகதிய கடிதத்தின்படி திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தால் தெரிவிக்கப்பட்டுள்ளது, மேலும், PED | அதற்கான உரிய நடைமுறையொன்று தயாரித்து அதற்கு முறையான அனுமதி பெற வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கருதப்பட்டது, மேலும் செயல்திறனை மதிப்பிடுவதற்கு எந்த நடைமுறையும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், கம்பனியின் சிரேஷ்ட மட்டத்திலான உத்தியோகத்தர்களின் வருகை மற்றும் வெளிச்செல்லல் தொடர்பாக நிறுவனத்தின் தற்போதைய சட்டங்கள் மற்றும் விதிமுறைகள் பின்பற்றப்படாததால் வருகையின் அடிப்படையில் செய்யப்படும் இந்த கொடுப்பனவுகளின் செல்லுபடியாகும் தன்மை சிக்கலாக இருந்தது. | 04/2023 சுற்றறிக்கையின் படி, பொது முயற்சிகளின் ஊழியர்களுக்கு வழிகாட்டுதல் வழங்கப்பட்டுள்ளது, அதன் படி, வருகை/செயல்திறன் அடிப்படையில் ஊக்குவிப்புப் படி வழங்கிய பிறகும், முந்தைய ஆண்டின் இலாபத்தின் அடிப்படையில் மிகையூதியம் வழங்கப்பட வேண்டிய முறை குறிப்பிடப்பட்டுள்ளது, அதாவது 2022 ஆம் நிதியாண்டில் இருப்பு சேதம் அறிக்கையிடப்பட்டமையால் ஊக்குவிப்புப் படி செலுத்தப்படவில்லை என்பது, மேலும், PED 08/2022 ஆம் இலக்க சுற்றறிக்கையின்படி சேமிக்கப்பட்ட விடுமுறைகளின் அடிப்படையில் அங்கீகாரம் கிடைத்துள்ளது என்பது. | |
| (இ) | ஊழியர் ஊக்குவிப்பாக மற்றும் அனுமதிக்கப்பட்ட/அனுமதிக்கப்படாத சம்பளமற்ற விடுமுறை எடுக்காத 162 ஊழியர்களுக்கு மீளாய்வாண்டில் தலா இரண்டு சம்பள உயர்வுகள் ஊழியர் ஊக்கத்தொகையாக நிறுவனத்தின் தலைவரின் ஒப்புதலுடன் செலுத்தப்பட்டிருந்தது. அதன்படி, சம்பள உயர்வாக மாதம் தோறும் ரூபா 67,690 கூடுதலாக செலுத்தப்பட்டிருந்தது. இந்த முன்னுதாரணமானது 2024 சம்பள உயர்வுகளிலும் பின்பற்றப்பட்டு, தலா இரண்டு சம்பள உயர்வுகள் செலுத்தப்பட்டிருந்தது. | 2021/2022 / 2023 ஆம் ஆண்டுகளில் நெருக்கடியான சூழ்நிலையில் திரிபோஷ கம்பனியின் உற்பத்தி நடவடிக்கைகளை அதிகரிக்க மேற்கொண்ட அர்ப்பணிப்பு காரணமாக, 2023 ஆம் ஆண்டில் அந்த நிறுவனத்தின் தலைவரின் ஒப்புதலுடன் இரண்டு சம்பள உயர்வு வழங்கப்பட்டது, 2023 நிதியாண்டில் கம்பனியால் அடையப்பட்ட நிதி (வரிக்கு முந்தைய இலாபம்) மற்றும் உற்பத்தி செயலாற்றலின் அடிப்படையில் நிறுவனத்தின் தலைவர், 2024 ஆம் ஆண்டிற்கான இரண்டு சம்பள உயர்வுகளை வழங்க ஒப்புதல் அளித்துள்ளார். | இதற்கு, முறையான நடைமுறைகள் தயாரிக்கப்பட்டு, தேவையான முறையான அனுமதிகள் பெறப்பட வேண்டும். |
| (ஈ) | கம்பனினால் 2016 ஆம் ஆண்டு நிர்வாக விதிக் கோவை தயாரிக்கப்பட்டு அதற்கு பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெற்றிருந்த போதிலும், இதுவரை பொது முயற்சிகள் திணைக்களத்தின் அனுமதி பெறப்படவில்லை. இருப்பினும், நிறுவனம் அதில் உள்ள சில அங்கீகரிக்கப்படாத விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளைப் பின்பற்றியது. | நிர்வாக விதிக் கோவை உள்ளடங்களாக கம்பனியின் அனைத்து அம்சங்களையும் உள்ளடக்கிய செயல்பாட்டுக் கையேடு பொது முயற்சிகள் திணைக்களத்திற்கு 2023 திசெம்பர் மாதம் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் அனுப்பப்பட்டதாக, அதற்காக பொது முயற்சிகள் திணைக்களத்தினால் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது என்பதும், அதற்கு சுமார் ஒரு மாத காலம் எடுக்கும் எனவும் அந்த திணைக்களத்தின் உத்தியோகத்தர்களால் தெரிவிக்கப்பட்டிருந்தது. | உரிய முறையான அனுமதி கிடைக்கும் வரை செயல்பாட்டுக் கையேட்டிலுள்ள விடயங்கள் செயல்படுத்தப்படக் கூடாது. |

## 3.4 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் வெளியிடப்பட்ட இலக்கம் DMS/E4/13/08/413/1 கொண்ட 2013 மார்ச் 28 ஆந் திகதிய கடிதத்தின் படி, 2010 திசெம்பர் 02 அன்று அங்கீகரிக்கப்பட்ட அனைத்து பதவிகளுக்கும் 30 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை விதிகளின்படி தயாரிக்கப்பட்ட தேசிய சம்பளம் மற்றும் ஆளணி ஆணைக்குழுவினால் பரிந்துரைக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறைக்கு ஒப்புதல் அளித்திருந்தாலும், அந்த திகதிக்குப் பிறகு உருவாக்கப்பட்ட மூன்று புதிய பதவிகளுக்கான ஆட்சேர்ப்பு நடைமுறைகள் தயாரிக்கப்பட்டு அங்கீகரிக்கப்படவில்லை. அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறையின்றி சில ஆட்சேர்ப்புகள் செய்யப்பட்டிருப்பதும் தெரியவந்தது. | இலங்கை திரிபோஷ நிறுவனத்தின் சேவைத் தேவையின் அடிப்படையில், சில புதிய அத்தியாவசிய பதவிகள் புதிதாக நியமிக்கப்பட்டுள்ளதுடன், தற்போதுள்ள பதவிகளின் எண்ணிக்கையில் சில திருத்தங்கள் செய்யப்பட்டு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது, மேலும் SOR I மேம்படுத்தாமல் தணிக்கை மூலம் காட்டப்படும் ஆட்சேர்ப்புகளுக்கான சம்பள நிலை, தொடர்புடைய பதவிக்கான பதவிகளின் எண்ணிக்கை மட்டுமே அதிகரிக்கப்பட்டுள்ளது, மேலும் இந்த பதவிகளுக்கான ஆட்சேர்ப்பு நடைமுறைகளும் (SOR) எதிர்காலத்தில் அங்கீகரிக்கப்படும். | ஒவ்வொரு பதவிக்கும் ஆட்சேர்ப்பு நடைமுறைகள் உருவாக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | இரண்டாம் நிலையின் கீழ் முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம் அல்லாத) பதவியில் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரிகளின் எண்ணிக்கை 16 ஆக இருந்ததுடன், உண்மையான பதவியணி எண்ணிக்கை 08 ஆனமையால் 08 பணியிடங்கள் வெற்றிடமாக இருந்தன. மேலும், மூன்றாம் நிலை பதவியான நிதி உத்தியோகத்தர் பதவியும் 2021 ஆகஸ்ட் 01 ஆந் திகதி வெற்றிடமாகியிருந்தது. இந்தப் பணியிடங்களை நிரப்பவோ அல்லது பதவிகள் தேவைப்படாவிட்டால் பதவிகளை ரத்து செய்யவோ எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. | நிலவிய நிதி உத்தியோகத்தர் பதவியில் உள்ள வெற்றிடங்கள் நிரப்பப்பட்டு, 2024 ஜனவரி முதல் இது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது, மேலும், சேவைத் தேவையின் அடிப்படையில் எதிர்காலத்தில் முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பமல்லாத) வெற்றிடங்களுக்கு சேவைத் தேவைப்பாட்டின் அடிப்படையில் எதிர்காலத்தில் ஆட்சேர்ப்பு செய்யப்படும் என்பது. | வெற்றிடங்கள் நிரப்பப்பட வேண்டும் அல்லது அந்த பதவிகள் பதவிகள் தொடர்ந்தும் தேவைப்படாவிட்டால் பதவிகளை இரத்து செய்யப்பட வேண்டும் |

## 4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டில் நடாத்தப்பட்ட உள்ளகக் கணக்காய்வு தொடர்பான அறிக்கைகளின் பிரதிகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | அந்த உள்ளகக் கணக்காய்வு ஐயவினா அவ்வப்போது நடைபெறும் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்களுக்கு சமர்ப்பிக்கப்படும் என்பது. | வருடாந்த உள்ளகக் கணக்காய்வு திட்டமிடப்பட்டு செயல்படுத்தப்பட வேண்டும் என்துடன் வழங்கப்பட்ட எந்தவொரு உள்ளகக் கணக்காய்வு ஐயவினாக்களுக்கு அல்லது அறிக்கைகளின் பிரதிகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்பது. |

### 4.2 கணக்காய்வு குழு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 2021 நவம்பர் 16 ஆந் திகதி பொது முயற்சிகள் திணைக்களத்தால் வெளியிடப்பட்ட பொது முயற்சிகளுக்கான வழிகாட்டிக் கோவையின் 4.2 (h) இன் படி, முகாமைத்துவ குழு 03 மாதங்களுக்கு ஒரு முறையாவது கூட வேண்டும், ஆனால் மீளாய்வாண்டின் போது 03 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் மட்டுமே நடாத்தப்பட்டிருந்தன. | 2023 நிதியாண்டில், கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் மூன்று முறை நடத்தப்பட்டு இருந்ததுடன் இந்த ஆண்டு முதல் ஆகக் குறைந்தது நான்கு கூட்டங்களாவது நடாத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | திட்டமிட்டபடி கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்களை நடத்த ஏற்பாடு செய்ய வேண்டும். |